# புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி
# கணிதம்

**நேரம் - 1 மணித்தியாலம்** **ஆசிரியர் - திரு.S.மோகன்**

மாணவர் பெயர் - ............................

**எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.**

**i.** அறுபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது - ....................................

**ii.** முப்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது - ....................................

**iii.** இருபதாயிரத்து ஐம்பது - ....................................

**தரப்பட்டுள்ள எண்களை எழுத்துக்களில் எழுதுக.**

i. **3 401** - ..........................................................................................................

ii. **40 039** - ..........................................................................................................

**வட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணையும் மிகச்சிறிய எண்ணையும் எழுதுக.**

**8 3**
**4 6**

**i.** ....................

ii. ............................

**4 5**
**7 8**

**i.** ............................

ii. ............................

**எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.**

**i.** 3, 12, 21, 30, ..........., ............

**ii.** 6, 12, 24, 48, ..........., ............

**iii.** 27, 23, 19, 15, ..........., ...........

**iv.** 4, 7, 8, 14, 12, 21, ..........., ...........

**v.** 3045, 3035, 3025, 3015, ............., ...........

**vi.** 4040, 4030, 4020, 4010, ............., ...........

**vii.** 4050, 4060, 4070, 4080, ............., ...........

**i. எட்டின் மடங்குகளை தெரிவு செய்து முறையே எழுதுக.**

**72 44**
**36 56**

..................................................................................

**ii. ஒன்பதின் மடங்குகளை தெரிவு செய்து முறையே எழுதுக.**

**32 21 27 18 60**
**45 42 35 28 36**

..................................................................................

S.MOHAN

1) பாடசாலை ஒன்றில் கலை நிகழ்சிகள் 11:30 மணிக்கு ஆரம்பமாகி 14:15 மணிக்கு முடிவடைந்தன. ஆயின் கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?

…………………………………………………………………………….

2) ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா மு.ப ஒன்பது மணி முப்பது நிமிடத்திற்கு ஆரம்பித்தது. அது 4 மணித்தியாலம் 45 நிமிடத்திற்கு பின்னர் முடிவடைந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

…………………………………………………………………………

3) புகையிரத நிலையத்திற்கு 14:20 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது?

………………………………………………………….. மணித்தியாலம்

4) ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு 4 மணித்தியாலம் 30 நிமிடத்தை செலவிட்ட சங்கர் அங்கே இருந்து பி.ப 3.00 இற்குப் புறப்பட்டான்.

i. சங்கர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

………………………………………………………….. மணித்தியாலம்

ii. சங்கர் நூலகத்திற்கு வந்த நேரம் யாது?

மு.ப …………………………………………….

5) காலை 6.50 இற்கு பாடசாலைக்கு வந்த முரளி பி.ப 2.15வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச்சென்றான்.

i. முரளி பாடசாலையிலிருந்து புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

………………………………………………………….. மணித்தியாலம்

ii. முரளி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்?

……………மணித்தியாலம் ……………நிமிடம்

6) 6 பென்சில்கள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும் 8 பென்சில்கள் வீதம் உள்ள மூன்று பெட்டிகளும் உள்ளன. அந்த 7 பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………..

7) பரிசளிப்பு விழாவுக்காக 810 புத்தகங்கள் கிடைத்துள்ளன. ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பரிசுப் பொதிகளைச் செய்யலாம்?

……………………………………………

S.MOHAN

8) பால் தேநீரை தயாரிக்கும் போது முதலில் 4 லீற்றர் 150 மில்லிலீற்றரும் இரண்டாவதாக 3 லீற்றர் 450 மில்லிலீற்றரும் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட பால்தேநீரின் மொத்த கொள்ளளவு யாது?

……………………………….

9) ஒரு பாத்திரத்தில் உள்ள மண்ணெண்ணெயிலிருந்து 6 லீற்றர் 250 மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலிலிருந்த மண்ணெண்ணெயின் கனவளவு யாது?

……………………………….

10) ஒரு பாத்திரத்தில் 2 லீற்றர் 375 மில்லிலீற்றர் குளிர் பானம் உள்ளது. அக்குளிர் பானம் 5 சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர் பானத்தின் அளவு யாது?

……………………………….

11) ஒரு குறித்த மோட்டார் வாகத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 8 கிலோ மீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபாய் 150.00 எனின் 40 கிலோ மீற்றர் செலுத்த தேவையான பெற்றோலுக்கான செலவு யாது?

………………………………….

12) ஐந்து நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தை சமமாக இட்டு ஒன்று ரூபாய் 30.00 வீதம் 8 தோடம்பழங்களையும் ஒன்று ரூபாய் 50.00 வீதம் 6 அப்பிள் பழங்களையும் வாங்கினர்.

i. அப்பிள் பழங்களையும் தோடம் பழங்களையும் வாங்க தேவைப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு?

ரூபாய்…………………..

ii. ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு?


ரூபாய்…………………..

13) பின்வரும் பின்னங்களை கூட்டுக.

i. $\frac{2}{3} + \frac{1}{4} =$ ..................    ii. $\frac{1}{2} + \frac{1}{8} =$ ..................

14) 12 பென்சில்களிலிருந்து $\frac{3}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

……………………………

15) 


உருவிலுள்ள முக்கோணியின் சுற்றளவு 10 m ஆகும். பக்கம் AB யின் நீளம் 2 m 50 cm உம் பக்கம் BC யின் நீளம் 3 m 80 cm உம் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது?

………….. m ................ cm

16) 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முகுந்தனின் வயது 10 ஆண்டுகளும் 5 மாதங்களும் கமலனின் வயது 12 ஆண்டுகளும் 8 மாதங்களுமாகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

……………. ஆண்டுகள் …………..மாதங்கள்


17) ஒரு நிறத்தாளிலிருந்து இரண்டு வாழ்த்து இதழ்களை தயாரிக்கலாம் 61 வாழ்த்து இதழ்களை தயாரிக்க தேவையான முழு நிறத்தாழ்களின் எண்ணிக்கை யாது?

………………………………….

18) ஒரு பிள்ளை **P** என்னும் இடத்திலிருந்து 20 **m** கிழக்கே செல்கின்றது. பின்னர். அது அவ்விடத்தில் இருந்து 20 **m** தெற்கே சென்று **Q** என்னும் இடத்தில் நிற்கின்றது. **P** யிற்கு எத்திசையில் **Q** அமைந்துள்ளது?

……………………………………

19) உருவைக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.



i. நிழற்றிய பகுதியை பின்னமாக எழுதுக.

………………………


ii. நிழற்றாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

………………………..

iii. ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1 cm உம் அகலம் 1 cm உம் ஆகும். நிழற்றிய பகுதியின் பரப்பளவு சதுர cm இல் யாது?

……………………..

20) உருவில் $\frac{1}{8}$ நிழற்றப்பட்டுள்ளது.



i. அதில் மேலும் $\frac{1}{4}$ ஐ நிழற்றுக.

ii. அப்போது நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியை பின்னமாக எழுதுக. ……………

21) 600 இனிப்புக்களில் 60 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்டன.

i. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை யாது? …………………………

ii. அத்தகைய எத்தனை சிறிய பைக்கற்றுக்களை தயார் செய்யலாம்?

……………………………

22) 100 cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15 cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் ஒன்றின் மீது ஒன்று 5cm வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

……………………………

S.MOHAN